OS.No.257/2015 D.W.2 –காசி 07.07.2025

இந்த வழக்கை வாதி பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்துள்ளார். 1 முதல் 3 வாதிகளும், நானும், துரைகண்ணு என்பவரும் முனுசாமி மற்றும் எல்லம்மாளின் வாரிசுகள் என்றால் சரிதான். 1 முதல் 6 பிரதிவாதிகள் துரைகண்ணுவின் வாரிசுகள் என்றால் சரிதான். ராசு என்கிற முனுசாமியும், கண்ணையனும் என் பாட்டனார் வேதகிரியின் வாரிசுகள் என்றால் இல்லை அவர்கள் முருகனின் வாரிசுகள். தாவா சொத்தை ஆதியில் என் பாட்டனார் வேதகிரி கிரயம் பெற்றார் என்றால் சரிதான். கிரயத்திற்கு பிறகு அவர்களது குடும்பத்தை சேர்ந்தவர்கள் கூட்டாக அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான். அதன் பின்பு என் பாட்டனார் வேதகிரியும், பெரிய பாட்டனார் முருகனும் வாய்மொழியாக பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் முருகனின் பாகத்திற்கு கிடைத்தது என்றால் சரிதான். அவ்வாறு கிடைத்த சொத்தை முருகனும், என் சிறிய தகப்பனார் கண்ணையனும் அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான். அவர்கள் காலஞ்சென்ற பிறகு தாவா சொத்தானது என் அண்ணன் துரைகண்ணுவிற்கு வந்தது. அவ்வாறு துரைக்கண்ணுவிற்கு வந்த சொத்தை நாங்கள் கூட்டாக அனுபவித்து வந்தோம். அவ்வாறு கிடைத்த சொத்தை பொறுத்த வாதிகள் 1/5ன் கீழ் கேட்பது சரிதான். அவர்களுக்கு 1/5 சொத்தை பிரித்து தர எனக்கு ஆட்சேபனை இல்லை.

**(1 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)**